## முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**அசல் வழக்கு எண். 07/2024**

**வா.சா.1**

நாள்: **02.09.2024**

2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திருமதி.ஜம்ருத் பேகம் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி திரு. எஸ். குமரகுரு, பி.எல்., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜம்ருத் பேகம் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கின் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>ஆவணங்கள்</u>

1) வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் தகப்பனார் முகமது மைதீன் அவர்கள் இறந்ததற்கான மலேசியா அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.1
2) 27.10.2018ம் தேதி வாதி 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் செய்தூன் பீவி இறந்தது சம்மந்தமாக RS மங்களம் பள்ளிவாசல் நிர்வாக சபை செக்கரட்டியால் கொடுக்கப்பட்ட இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2 (பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன்

குறியீடு செய்யப்படுகிறது.)

3) வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை குறித்து பாகம் பிரித்து தரக்கோரி தன் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3,
4) வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பினை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான கவர் வா.சா.ஆ.4
5) வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பினை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான கவர் வா.சா.ஆ.5
6) வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பினை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான கவர் வா.சா.ஆ.6
7) 05.09.2023ம் தேதி தாவா 1வது இலக்க சொத்தை பொறுத்து ஏற்பட்ட நத்தம் நிலவரி சிட்டா உண்மை நகல் வா.சா.ஆ.7
8) 05.09.2023ம் தேதி தாவா 2வது இலக்க சொத்தை பொறுத்து ஏற்பட்ட நத்தம் நிலவரி சிட்டா உண்மை நகல் வா.சா.ஆ.8
9) 16.05.2023ம் தேதியில் ஏற்பட்ட தாவா 3 மற்றும் 5 இலக்க சொத்துகளுக்குண்டான கணினி பட்டா பதிவிறக்க நகல் வா.சா.ஆ.9
10) 16.05.2023ம் தேதியில் ஏற்பட்ட தாவா 4வது இலக்க சொத்துக்குண்டான கணினி பட்டா பதிவிறக்க நகல் வா.சா.ஆ.10
11) தாவா 1 மற்றும் 2 இலக்க சொத்துக்களில் உள்ள வீடுகளுக்கு வாதி வரி செலுத்திய ரசீதுகள் ( 7 எண்ணிக்கைகள்) அசல் வா.சா.ஆ.11

தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .